DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.223/2020

Prosecution side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ...திருமதி. ஜான்ஸிமேரி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.12.2024.**

A1 to A3 are present.

முதல்விசாரணை:–

நான் தூத்துக்குடி மாவட்டம், வெள்ளப்பட்டி கிராமம், ஐம்பதுவீட்டு காலனியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். என்னுடைய கணவர் கடல் தொழில் செய்து வருகிறார். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னதுரை என்னுடன் பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளில் 1 வதாக நிற்பவர் அந்தோணி மகாராஜா, அவர் எனது தம்பியின் மகன் ஆவார். 2 வதாக நிற்பவர் ரெஸ்லின் மேரி என்னுடைய தம்பியின் மனைவி, 3 வதாக நிற்பவர் சேகர் மணி அவரை எனக்கு தெரியும். என் தம்பி இறப்பதற்கு முன்பு அவரது பிள்ளைகளான மகாராஜா(1ம் எதிரி), மற்றும் மார்ட்டின் ஆகியோர்களுடன் படகில் மீன்பிடிக்க போய் வருவார். என் தம்பிக்கும் எனக்கும் தாய்மாமன் முறைக்கு முறை செய்ய வராத காரணத்தினால் சிறு சிறு பிரச்சனை இருந்து வந்தது. அதன்பிறகும் நாங்கள் பேசாமல்தான் இருந்து வந்தோம். அதன்பிறகும் நான் அவனுடன் பேசவேயில்லை. அவன் இறந்த பின்புதான் பார்த்தேன். அப்படி பேசாமல் இருக்கவில்லை என்றும், என்னை பார்க்க அடிக்கடி வந்துள்ளான் என்றும் சொன்னால் இல்லை. என் தம்பி சின்னதுரை கொலை வழக்கு சம்மந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் எனக்கு ஒன்றும் தெரியாது. என் தம்பி இறந்தது சம்மந்தமாக யார் புகார்மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் தம்பி மரணம் விசயமாக எப்படி இறந்தார் என்றும், என்ன நடந்தது என்றும் எனக்கு ஒன்றும் தெரியாது, நான் எதுவும் கேள்விப்படவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையின்போது, என் தம்பி சொத்து பிரச்சனை காரணமாகவும், என் பெண் பிள்ளைகளுக்கு தாய்மாமா முறை செய்யவேண்டி வராத காரணத்தினாலும், என் தம்பி பேசாமல் விலகி சென்றார் என்றும், இதனால் அவர் இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் அவரிடம் பேசாமல் இருந்து வந்தேன் என்றும், 05.07.2019 ஆம் தேதி மாலை 5.00 மணியிலிருந்து 8.00 மணிக்குள் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் என் தம்பி என்னை பார்க்க 3 முறை வந்தார் என்றும், பின்பு 8.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்ததும், அவரும் வீட்டிற்கு வந்தார் என்றும், அப்போது அவர் அழுதுகொண்டே என்னிடம் வந்து எங்க அக்கா போனாய், உன்னை பார்க்க 5.00 மணியிலிருந்து 3 தடவை வீட்டிற்கு வந்தேன் என்றும், நீ வீட்டிலேயே இல்லை என்று சொன்னார் என்றும், நான் அவனிடம் எதுக்கில அழுற என்று கேட்டதற்கு அவனது மனைவி ரெக்ஸிலின் மேரி கடற்கரையில் வலைசிக்கல் எடுக்க வரும்போது அவளுக்கும், சேகர்மணிக்கும் பழக்கம் ஏற்பட்டு தற்போது இருவரும் கள்ளதொடர்பில் இருந்து வருவதாகவும், தனது மனைவி தான் கடலுக்கு சென்றபின்பு செல்போனில் நீண்டநேரம் சேகர்மணியிடம் பேசிக்கொண்டிருப்பதாகவும், இருவரும் சேர்ந்து தன்னை கொலை செய்ய சதிதிட்டம் தீட்டியிருப்பதாகவும், 2 வாரங்களுக்கு முன்பு தனது மனைவி தனக்கு பிராந்தியில் ஏதோ கலந்து கொடுத்ததாகவும், அப்போது அவரது மாமா வீட்டிற்கு வந்ததாகவும், தான் அறியாமல் அதை எடுத்து அவரது மாமாவிடம் கொடுத்ததாகவும், உடனே தனது மனைவி ஓடி வந்து அதை தட்டிவிட்டதாகவும், ஏன் என கேட்டபொழுது அதில் ஏதோ விழுந்து விட்டது என்று கூறினார் என்றும், பின்பு மீண்டும் எனது தம்பி என்னிடம் சத்தமாக அழுதான் என்றும், நான் அவனை சமாதானப்படுத்தினேன் என்றும், ஆனால் அவன் அழுதுகொண்டே தனது மனைவி ரெக்ஸிலின் மேரியும், சேகர்மணியும் சேர்ந்து இன்னும் 2 நாட்களுக்குள் எனது பிள்ளைகளை வைத்து கொன்றுவிடுவார்கள் என்றும், தான் செத்த பின்பு தன்னுடைய பிள்ளைகளை பார்த்துக்கொள் அக்கா என்று சொல்லி அழுது கொண்டிருந்தான் என்றும், நீண்ட நேரத்திற்கு பிறகு அவனை சமாதான படுத்தி அவனுக்கு சாப்பாடு கொடுத்து, நான் அவனை அவனது வீட்டிற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அப்போதுதான் அவனை கடைசியாக பார்த்தேன் என்றும், அடுத்த நாள் காலையில் அவனது மனைவியான ரெக்ஸிலின்மேரி(2 ம் எதிரி)யும், அவனது மகனான அந்தோணி மகாராஜா(1 ம் எதிரி)வும், சின்னதுரை கடலில் காணாமல் போய்விட்டதாக கூறினார்கள் என்றும், அதனால் எனக்கு சந்தேகமாக இருந்தது என்றும், அவன் எப்படி தற்கொலை செய்திருப்பான் என்று யோசித்து கொண்டிருந்தேன் என்றும், பின்னர் 3 நாட்கள் கழித்து அவனது உடல் ராமநாதபுரம் தெற்கு நரிப்பையூர் கடலில் கரை ஒதுங்கியிருப்பதாகவும், பின்னர் பிரேத பரிசோதனை முடிந்தவுடன்தான் எனது தம்பி அந்தோணி சின்னதுரையை அவனது மனைவியான ரெக்ஸிலின் மேரி,சேகர்மணி ஆகியோர்களின் தூண்டுதலின்பேரில் எனது தம்பியின் மகனான அந்தோணி மகாராஜா அடித்து

கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என தெரிந்தது என்றும், எனக்கு மனம் மிகவும் உறுத்தியதால் 14.07.2019 ஆம் தேதி நிலையம் ஆஜராகி போலீசாரிடம் மேற்படி விவரங்களை கூறினேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது